தலைவர் கலைஞர் அவர்கள் தேர்தல் நேரத்தில் அந்தப் பகுதிக்கு வந்தபொழுது, அதைப் பரிசீலனை செய்வதாகச் சொல்லி இருக்கிறார்கள். அருள்கூர்ந்து, எங்களுடைய தொகுதியில் இயங்கி வந்த இந்த ஒரே ஒரு நூற்பாலையை அரசு ஏற்று நடத்த முன்வருமா? அதிலும் இந்த ஆண்டே நடத்துவதற்கு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. என். நேரு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போதைய நிர்வாகம், தொடர்ந்து நிதிநிலை நெருக்கடி இருக்கின்ற காரணத்தினால் திறக்க இயலாது என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால், அதே நேரத்தில், அந்த ஆலையை வெளியாருக்கு விற்பதற்கு முடிவு செய்திருக்கிறார்கள். யாராவது வாங்குவதற்குத் தயாராக இருந்தால், அரசின் சார்பாக அந்த ஆலையைத் திறப்பதற்கு வேண்டிய அத்தனை சலுகைகளும் தரப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கூட்டுறவு பால் வழங்கும் சங்கங்கள்.

*2586. திரு. இரெ. இராசமாணிக்கம் :

மாண்புமிகு செய்தி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டத்தில் உள்ள கூட்டுறவு பால் வழங்கும் சங்கங்கள் எத்தனை ?

(ஆ) அவைகளில் லாபத்தில் இயங்குபவை எத்தனை?

மாண்புமிகு திரு. கே. என். நேரு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இரண்டு.

அவைகள் (1) நீடாமங்கலம் பால் வழங்கும் கூட்டுறவு சங்கம்.

(2) மன்னார்குடி பால் வழங்கும் கூட்டுறவு சங்கம்.

(ஆ) ஒன்று.

நீடாமங்கலம் பால் வழங்கும் கூட்டுறவு சங்கம்.

1990 மே 3]

(9-50 மணி)

திரு. இரெ. இராசமாணிக்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தில் இரண்டு கூட்டுறவு பால் வழங்கும் சங்கங்கள் இருப்பதாக அமைச்சர் அவர்கள் தெரிவித்து இருக்கிறார்கள். அவைகளில் இலாபத்தில் இயங்குபவை எத்தனை என்று கேட்கிறபோது ஒன்று என்று சொல்லியிருக்கிறார்கள். தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் பால் வழங்கும் சங்கங்கள் இன்றைய தினம் பால் உற்பத்தியாளர் சங்கங்களாக மாற்றப்பட்டு இருக்கின்றன. அப்படி பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்களாக எத்தனை சங்கங்கள் பதிவு செய்யப்பட்டு உள்ளன என்பதை நான் தங்கள் மூலமாகத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. என். நேரு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களாக தஞ்சை மாவட்டத்தில் எந்த ஒரு இடத்திலும் மாற்றுவதற்கு அரசு முடிவெடுக்கவில்லை. மாற்றுவதாக முடிவெடுத்தபோது அங்கே இருக்கிற மக்களுடைய தேவையை அறிந்து மீண்டும் பால் வழங்கும் சங்கங்களாகவே இருக்கட்டும் என்று அரசு முடிவெடுத்து இருக்கிறது. தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் 192 பால் உற்பத்தியாளர் சங்கங்கள் உள்ளன. அவைகளில் 42 உற்பத்தியாளர் சங்கங்கள் இலாபகரமாகச் செயல்படுகின்றன. அடுத்து பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள், ஏற்கெனவே ஆரம்பிக்கப்பட்டு 70 சங்கங்கள் செயல்படாமல் இருக்கின்றன என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அதே போல் பால் நுகர்வோர் சங்கங்கள் இரண்டு மாவட்ட ஒன்றியமாக அங்கே செயல்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. இரெ. இராசமாணிக்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 70 கூட்டுறவுச் சங்கங்கள் நடைபெறாமல் உள்ளன என்று தெரிவித்திருக்கிறார்கள். அவைகளை நல்ல முறையில் இயங்க வைக்க நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டுள்ளதா ? 150 சங்கங்கள் நட்டத்தில் இயங்கிக் கொண்டிருக்கின்றன என்று தெரிவித்திருக்கிறார்கள். அவைகளையும் இலாபத்தில் இயங்க வைக்க வழிவகைகள் வகுக்கப்பட்டிருக்கின்றனவா என்பதை நான் தங்கள் மூலமாகத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. என். நேரு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மொத்தம் 192 பால் உற்பத்தியாளர் சங்கங்களில் 42 சங்கங்கள் இலாபத்தில் இயங்குகின்றன. மீதி இருக்கின்ற சங்கங்கள் நல்ல முறையில் இயங்கவேண்டும்

என்றால் ஆங்காங்கு இருக்கின்ற சட்டமன்ற உறுப்பினர்கள் ஊராட்சி ஒன்றிய பெருந்தலைவர்கள், உள்ளூரில் இருக்கின்ற ஊராட்சிமன்றத் தலைவர்கள் ஆகியோர் எல்லாம் நடவடிக்கை எடுத்தால் அந்தச் சங்கங்கள் இலாபத்தில் இயங்க இந்த அரசும் வகை செய்யும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

மொரப்பூரில் பால் குளிரூட்டும் நிலையம்.

*3751. திரு. வ. முல்லைவேந்தன் :

மாண்புமிகு செய்தி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டத்தில் புதியதாக அமைய உள்ள பால் குளிரூட்டும் நிலையத்தினை மொரப்பூரில் அமைக்கும் திட்டம் அரசின் ஆய்வில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. கே. என். நேரு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) தர்மபுரி மாவட்டத்தில் மொரப்பூரில் புதிய பால் குளிரூட்டும் நிலையம் அமைப்பதற்கான சாத்தியக் கூறுகள் இருப்பதால் எட்டாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் அரசின் மாநில பால்வளத் திட்டத்தின்கீழ் தமிழ்நாடு பால் உற்பத்தியாளர் கூட்டுறவு இணையம் மூலம் அமைக்க கருத்துரு உள்ளது.

திரு. வ. முல்லைவேந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் அமைச்சராகப் பொறுப்பேற்றவுடன் முதல் முறையாக தர்மபுரி மாவட்டத்திற்கு வருகை தந்து அந்த பால் குளிரூட்டும் நிலையம் அமைவதற்கான இடத்தை எல்லாம் பார்வையிட்டு இருக்கிறார்கள். லாரிகளில் சென்னைக்கு பால் கொண்டு வருவதைத் தவிர்த்து அங்கே இரயில் நிலையம் இருக்கின்ற காரணத்தால் குறைந்த செலவிலேயே அந்தப் பாலைக் கொண்டு வருவதற்குரிய வகையில் அந்த பால் குளிரூட்டும் நிலையத்தை உருவாக்கித்தர அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.